RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s1420

OPEN ACCESS

# குறுந்தொகையை முன் வைத்து சங்கப் பெண்பாற் புலவர்களின் மொழியாடல் திறன்

**ம. கண்ணம்மாள்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி), தஞ்சாவூர்-613007, தமிழ்நாடு, இந்தியா.

# Linguistic Proficiency of Sangam Women Poets' in Kurunthogai

**M. Kannammal** [a, *]

[a] Department of Tamil, Kundavai Nachiyar Government Women's Arts College, Thanjavur- 613007, Tamil Nadu, India

* Corresponding Author: dr.m.kannammal@kngac.ac.in

Received: 17-11-2021
Revised: 23-09-2022
Accepted: 05-10-2022
Published: 29-11-2022

Check for updates

**ABSTRACT**

The context of the poem is set as the entry of the far-off days within the language of Agam, Puram. It is a stage of language development. Land has also played a major role in building the background of this system, namely language. Every country became a gem, offering abundance, an endless quality of culture, wealth, and happiness. Great symbols were included in this. One of the main driving forces of the meeting was language. The secondary agent was poetry. Those who walk along these two lines can be called language promoters. These are the creators who poured out the feelings they had in their minds to create their respective ideologies. A great linguistic thought established by such people was declared in ancient times as "Sangam Poetry." Among them were the women poets who spoke in a multifaceted manner, carrying influences beyond their borders. This article examines how Sangam poetry's use of "language" relates to its poets' capacity for expressiveness and how contemporary poetry functions.

**Keywords:** Kurunthogai, Sangam Women Poets, Agam, Puram

## முன்னுரை

அகம், புறம் என்ற மொழியமைப்புக்குள் கவிதைச் சூழலானது வெகுவாரியான நாட்களின் உள்ளீடாக அமைக்கப்பட்டுள்ளது. இது மொழியின் மேம்பட்ட வளர்நிலை. இந்த அமைப்பு, மொழி இதனின் பின்னணியை நிர்மாணிப்பதில் நிலமும் தன் பெரும் பங்கைப் பெற்றுள்ளது. ஒவ்வொரு நிலமும் பேரியற்கையாக மாறி அளவுக்கதிகமான, எல்லையற்ற பண்பை, கலாச்சாரத்தை, வளமையை, இன்னலை மாந்தருக்கு வழங்கத் தொடங்கின. இதனுள், பெரும் அடையாளங்கள் பொதிந்து போயிருந்தன. அதனை, மீட்டலின் ஒரு முதன்மைக் காரியவாதியாக மொழி நின்றது. துணைக் காரியவாதியாகக் கவிதை நின்றது. இவ்விரண்டு கோடுகளிலும் நடை பயின்றவர்களை மொழி ஊக்கிகள் எனலாம். இவர்களே தத்தம் கருத்தியல்களை மனத்தில் கொண்டிருந்த உணர்வுகளைக் கொட்டித் தீர்த்த உருவாக்காளர்கள். அத்தகையோரால் நிறுவப்பட்ட ஒரு பெரும் மொழிச்சிந்தனை 'சங்கப் பாக்கள்' எனப் பழமையில் அறிவித்துக்கொண்டன. அதனுள், தம் எல்லை கடந்த தாக்கங்களைச் சுமந்து பல்விதத்தன்மைப் பாங்கோடு உரைத்தவர்கள் பெண்பாற் புலவர்கள். சங்கப்பாக்களுள் குறுந்தொகையில் அவர்களின் வெளிப்படு திறனுக்கு 'மொழி' எவ்வாறு இணைந்ததென்றும்,

அஃதேபோல், நடப்பியலில் உள்ள கவிதைகள் எங்ஙனம் பொருந்துகின்றன என்பது பற்றியும் இக்கட்டுரை அமைய இருக்கின்றது.

## உயருணர்வு

பெண்ணின் மனம் கலவையான உணர்வுகளை உட்கொண்டது. அவ்வுணர்வுகள் வெறும் அழகு சார்ந்தவை மட்டுமல்ல. வாழ்க்கையின் கற்பிதங்கள் அனைத்தும் உள்ளடங்கிய ஒரு சாரம். பற்பல பெண் உருக்களின் மனச்சாரம் சங்க இலக்கியப் பாக்கள். இவற்றிற்கு ஐந்நிலமும் பின் நின்றன. சங்க காலத்தில் பெண்கள் வரலாற்றுப் பழமை கொண்டு, தாம் உணர்ந்ததை, அனுபவத்தின் வாயிலாக, மிகையான அளவில் பாக்களை எழுதியுள்ளனர். இதை, "சங்க காலத்தில் நூற்றுக்கணக்கான பெண் கவிஞர்கள் எழுதியிருக்க வாய்ப்புண்டு. அவற்றில் தொகுப்பாளர்களின் மனத்தடை, கட்டுப்பாடு, நோக்கம் காரணமாக பல கவிஞர்களின் கவிதைகள் தொகுக்கப்படாமலிருக்கச் சாத்தியமுண்டு. எனவே, சங்க காலத்தில் பெண்கள் எழுத்தறிவு பெற்றிருந்ததுடன் கவிதைகளும் எழுதினர் என்பது, அன்றைய சமூக மதிப்பீட்டில் பெண்ணின் இடத்தினை அறிய உதவுகின்றது" என்பதன் வாயிலாக அறிய முடிகின்றது (Murugesapandiyan, 2014).

இத்தகைய பாக்களின் வழியாக சங்கப் பெண் கவிஞர்கள் அவரவர் வாழ்க்கையில் ஏற்பட்ட கூறுகளைப் பொதுவெளியில் தன்னிச்சையாகப் பதிவு செய்துள்ளமையை இயல்பாக அறிய முடிகின்றது. அதில், அந்தக்கால வாழ்க்கையின் இன்னபிறவும் சஞ்சலமின்றி வெளிப்படுகின்றன. இப்போக்குநிலை சங்கப்பாக்களில் விரவிக் கிடக்கின்றது. மன எழுச்சியின் உச்சக்கட்ட வெளிப்பாடுகளாகவே மாறியுள்ளதில் பெண்களின் இருப்பு தொனிக்கின்றது. பூச்சற்ற வெளிப்படும் தொனியை உற்று நோக்கும்போது குறுந்தொகை வாயிலாக உள்ள பெண் கவிஞர்களும், நடப்பியலில் உள்ள பெண் கவிஞர்களும் நடமாடுகின்றனர்.

## குறுந்தொகையில் பெண் மொழி

சங்கப் பாடல்கள் நிலத்தின் வழியேதான் காட்சிப்பரப்பை பரத்திச் செல்கின்றன. பாக்களுக்கு அதுவே நற்களம். பொதுவாக, நிலமே வாழ்க்கையின் பிரதிபலிப்பு. பண்பாடு, கலாச்சாரம் போன்ற சாத்தியக் கூறுகளின் அடித்தளம். இதை, "தமிழ் மண்ணுக்கேற்ப விளைந்த இந்நிலப் பண்பாட்டின் எல்லா அடையாளங்களையும் தமிழ்க்கவிதை கொண்டுள்ளது. அதாவது தமிழர்கள் ஏதோ ஒரு வெளிநாட்டிலிருந்து, ஏற்கனவே வளர்ச்சியடைந்த மொழியோடும் இலக்கியத்தோடும் தமிழ் மண்ணுக்கு வந்தவர்கள் என்பதற்கான எந்த அடையாளமும் தமிழ்க்கவிதையில் இல்லை" என்பதன் மூலம் உணரலாம் (Poornachandran, 2004).

இப்படியான நிலத்தில்தான் தமிழ்ப் பெண் கவிஞர்கள் வாழ்ந்தார்கள். அவர்களின் இயற்கையான வாழ்க்கைச் சூழல், ஆழ்ந்த புரிதல் போன்றவையும், கண்டதும், கேட்டதும், உணர்ந்ததுமான காட்சிக் கோர்வைகளையும் மனதினுள் சுழல விட்டதின் போக்கிற்கு சங்கப்பாக்கள் உறுதுணையாயின. அதனுள் கருத்துப் பரவலும், கட்டமைக்கப்பட்ட குறியீடுகளும், சமூகம் சார்ந்த வரன்முறைக்குள் உள்வரத் தொடங்கின. அவ்வாறு, தொடங்கிய பாக்கள் நிலத்துடனேயே மையமிட்டுக் கொண்டன. நிலமும், மொழியும் மக்களின் பாடுபொருளாகி எழுந்த சங்கப் பாக்களுள் பெண்ணியர்களின் பங்கு முன்னிலைப்படுத்தப்பட வேண்டியதொன்று. சங்ககால மாந்தரினம் அன்பையும், போரையும் ஒரே புள்ளியாகக் கொண்டது. அன்பினுள் இருத்தலும், பிரிதலும் இயல்பு. அஃதேபோல், போரினுள் வெற்றியும் தோல்வியும் இயல்பு. இந்த பகுப்பு முறைக்குள் அடங்கிப்போன வாழ்க்கைச் சூழல் பெண்களை எவ்வாறு தத்தம் இருப்பிற்குள் கொண்டு சென்றது என்பதனை குறுந்தொகையில் சில பெண்பாற் புலவர்களின் மொழி கொண்டு துய்க்கலாம். குறுந்தொகைப் பெண்கள் அன்பு, பிரிதல், ஆற்றாமை, முரண்படல் போன்ற பல உட்கூறுகளை முன்னிலைப்படுத்துகின்றனர். அதனுள் சில பாக்கள் பெண்மொழி பேசும் உணர்வுப் பூச்சுகள். அள்ளூர் நன்முல்லையார், நன்னாகையார்,

ஔவையார், ஒக்கூர் மாசாத்தியார் போன்றோர் பாக்களின் உதவியோடு மொழியினைப் பெரும்பரப்பில் களமாட விட்டிருப்பதை நுகரலாம்.

## அன்பு, ஊடல்

அன்பு, ஊடல் இவை காலத்திற்குமான சொற்கள். ஒன்று மனதில் நீர்ப்பூத்தலையும் மற்றொன்று நீர்ப்பூத்தலின் பிரிவையும் சொல்வது. நிலம் எந்நேரமும் நீர் சுரக்கின்றது என்று வைத்துக்கொண்டால் அது அன்பு, நிலம் சிறிது நேரம் நீர் சுரக்காது என்றால் அது ஊடல். சிறு மழைத்துளியின் ஈரத்தையும், மிதச் சூட்டின் வெப்பத்தையும் கொண்ட பெரும் எழுத்து இவ்விரண்டும். எதிர்கொள்ளலையும், ஏற்றுக் கொள்ளாததையும் கைக்குள் கொண்ட உள் ரேகைகள். ரேகைகள் தெரிவதும், மறைவதும் மாந்தரிடத்தில்தான் உள்ளது.

முதலில் அன்பைப் பார்த்தோமென்றால் மானிடரை இழுக்கக் கூடியதொரு வார்த்தைப் பயன்பாடு. எவரிடத்தும் எந்த நிபந்தனையுமின்றி பற்றிக் கொள்ளும் ஒரு விடயம் உண்டென்றால் அது அன்பு மட்டுமே. பெறுபவர்க்கும் கொடுப்போருக்குமான ஒரு உடன்பாட்டுவகை. புரிதலான அன்பில் தர்க்கம் நிகழ வாய்ப்பில்லை. நம்பிக்கையானதொரு அன்பில் பிரிதல் நிகழவே நிகழாது.

அனுதாபத்தினாலோ, அலங்காரப் பூச்சுகளினாலோ இதுபோல் பிற உபகருவிகளாலோ அன்பு வர வழியில்லை. சகல உயிரிகளையும் அரவணைக்கும் சொல்லாக அன்பு பார்க்கப்பட்டாலும், ஆண், பெண் இருவரிடையேயான அன்பு பல அமுத விஷப் பரீட்சைகளை உள்ளடக்கியது. நான் உன்மேல் அன்பாக இருக்கிறேன் எனச் சொல்லி கடல்போலப் பொங்கினாலும், எதிரில் இருப்பவரிடம் சின்ன அலையாவது தானாக வர வேண்டும்.

இந்த அலை வராததை வன்முறையாக வலிய வர வைக்கத்தான் பல அமில வீச்சு, கொலை, வன்மம், தற்கொலை போன்றவை அரங்கேறுகின்றன. இங்கு ஏன்? எப்படி? எனக் கேள்வி எழுப்பினால் சமூகம்தான் பதில் சொல்ல வேண்டும். ஒரு ஆண்குழந்தை வளரும்போதே பெண்ணை மதிக்கக் கற்றுக்கொடுத்தோமென்றால், பெண்ணின் மீது இவ்வளவு வன்மம் வராது. அன்பு அவரவருக்கான இடத்தை அவரவருக்குக் கொடுத்துக்கொள்ளும். அன்பு மாறிக்கொண்டேதானிருக்கும். புதிதாகத் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும்.

அடுத்து, ஊடலை எடுத்துக்கொண்டோமானால், சிந்தித்துத் திரிதல் மனநிலைதான் ஊடல். இந்தத் திரிதலுக்குப் பின்னாலான ஊடல் சமாதானமா? சர்ச்சையா? என்பது அவரவர் பாடு என்றாகிறது. இந்த ஊடலில் துருவல் இருக்கக் கூடாதெனலாம். ஊடலின் பொழுதில் அதைப் பொற்கொல்லர் ஊதுவதைப் போல புடம் போட்ட ஊதல் அவசியமில்லை. பிரிவு நீங்க ஊதினால் போதுமானது. அதுமட்டுமின்றி, மாயைக்குள் சிக்காமல் சமரம் ஒன்றே ஊடலில் தேவை. ஊடலில் மரபுத் திசை தேவை இல்லை. யதார்த்த திசை மட்டுமே.

பருவ மழை பொய்த்தல் போல ஊடல் மனிதருக்குச் சில நேரம் பொய்ப்பித்தலைத் தந்துகொண்டுதானிருக்கும். இது, எல்லாமே மொழி காட்டும் சடங்குதான் என்பதனை,

“மொழியால் ஆனது மனித வாழ்க்கை. இந்த மண்போல மொழிக்குள் இருந்தும் புறப்பட்டு வரும் விதவிதமான படைப்புகளை அளவிட்டு உரைத்திட முடியாது. உலகம் முழுவதிலும் எழுதப்படும் கவிதைகளை நினைத்துக் கொள்கிறேன். மண்ணும், கடலும், மலையும் போன்று உற்பத்திக் கிடங்காக அமைந்து வினைபுரிவதை உணர்ந்து ஒரு கணம் வியப்பில் உறைந்து விடுகிறேன்” (நவீனக் கவிதைகளும், என் வாசிப்புகளும்-2019) என்ற கூற்றின் வழி அறியலாகின்றது.

இம்மொழி தரும் சொற்களாகிய அன்பையும், ஊடலையும் குறுந்தொகைத் தலைவி உணரும் விதம் வேறு.

“நல் நலம் தொலைய, நலம் மிகச் சா அய்

இன் உயிர் கழியினும் உரையல், அவர் நமக்கு,

அன்னையும் அத்தனும் அல்லரோ?

புலவி அஃது எவனோ! அன்பிலங்கடையே?"

தலைவி தோழியிடம், தலைவன் தன் மேற்கொண்ட அன்பானது பெற்றோரிடத்து காட்டக் கூடிய அன்பு போல மட்டுமே. காதலர் பொருட்டு நிகழும் இன்பம் துய்க்கும் அன்பு தலைவனிடத்து எனக்குத் தோன்றவில்லை. இன்பம் துய்ப்பது அன்புள்ள இடத்தில் மட்டுமே பொருந்தி வரும். அதுவே பொருத்தப்பாடு உடையது. இதில், கேட்கப்பட வேண்டிய கேள்வியும் ஒன்றுள்ளது. அன்பில்லாத இடத்து ஊடலுக்கு வேலை என்ன? வேலை இல்லை (Nagarajan, 2004).

உன்னதமான மதிப்பீடுகளின் உருவாக, உறைவிடமாகப் பெண்ணைக் கட்டமைக்கப்பட்டதொரு நிலையைக் குறுந்தொகைத் தலைவி மறுக்கின்றாள். அவன் மீது தனக்கான நிலைப்பாட்டினை உறுதியாகக் கூறுகின்றாள். எவ்வாறெனில், நிராகரிக்கப்படும் அன்பு தேவையில்லாத கட்டுமானம். அந்நியமாக உணரும் வழியில் அன்பு தோன்ற முடியாதென்பதை குறுந்தொகை வழி, பெண்வாய்மொழியாக எடுத்துரைக்கப்படுகின்றது.

## தனிமை, மாலை

தனிமை, மாலை இவ்விரண்டும் ஒவ்வொருவரின் இரகசிய சங்கேதக் குறியீடுகள். இன்னும் சொல்லப் போனால் உருவத்திற்கும் மனதிற்குமான அந்தரங்கம். எல்லோருடைய வாழ்விலும் தனிமையும், மாலையும் அறிக்கை விட்டுக்கொண்டேயிருக்கும். இரண்டுமே மெய்தீண்டும் இளந்தென்றல்தான். சில நேரங்களில் பெரும் சூறாவளியாக நம்மையே சாய்த்துவிடும். எந்தக் கட்டுக்குள்ளும் அடங்காத காலத்தின் பின்னகர்தலும், முன்னகர்தலும் அது. உயர்திணை, அஃறிணை எல்லாமும் இதனுள் அடக்கம். ஆன்றடங்குதல் எனக்கூடச் சொல்லலாம். மனதின் ஒதுக்கிடமற்று ஒத்த சொல்லோ, இசைவுச் சொல்லோ தனிமையும், மாலையும் ஒப்படைத்துக்கொண்டேயிருக்கும். குறிப்பாக எடுத்துக்கொண்டோமானால் மொழிக்கு அழகு என்பதே கவிதையில் ஊன்றிக் கிடக்கின்றது. அது, நெஞ்சுக் கட்டுக்குள் திமிறத் திமிற நர்த்தனம் ஆடும் ஓர் பெரும் இருத்தல் எனவும் மையப்படுத்தலாம். பொதுவாக, கவிதையில் சொற்களென்பதே ஒரு அழகுநிலை. அஃது வாசிப்பவருக்கும், மொழிக்குமான உள்ளீடு. இஃது,

"கவிதை தேர்ந்துகொண்ட சொற்களைச் செறிவூட்டி சிக்கனமான தொடர்களின் வழியாக ஓர் உணர்வுப் படிமத்தை வாசிப்பில் எழுப்புவதாக உள்ளது. கவிதை வாசிப்பவரின் உணர்தலை, அறிதலை, அனுபவத்தை வெளிப்படுத்துவதற்கான மொழியமைப்பைத் தருவதாக உள்ளது. உணர்தலின் வழியாக வாசிப்பவரிடம் ஆழ்படிமங்களை உருவாக்குகிறது. இப்படிமங்கள் வழி ஒரு புதிய மொழியை வாசிப்பவர் பெறுகிறார். கவிதை மொழியை இசைப்பதன் மூலம் வாசிப்பில் லயத்தை ஒருமிப்பை ஏற்படுத்துகிறது. வாசிக்கும் உடலை உணர்வாகத் தகவமைக்கிறது. இவ்வாறாக, மொழியினை அடர்வாக்குவதன் மூலம் புத்தாக்கம் செய்துகொண்டே இருக்கிறது. பல உலகங்களின் பன்மடிப்பை அதற்கான சாத்தியங்களைத் தரும் சுதந்திர வெளியாக உள்ளது" என்ற வரிகளின் வழியாக பொருத்தப்பாடுடையதாகயிருக்கிறது (Nagarajan, 2004).

தனிமை சில நேரங்களில் இருள் மனநிலை தந்தாலும் அதிலும் ஒரு ஒளி தென்படும். உயிர் பிறக்கும் நாளிலிருந்து உயிர் துறக்கும் நாள்வரை தனிமை மாந்தர்களோடு ஊடுகொண்டே உள்ளது. இப்படி ஊடுகொள்ளாமல் தானே நிகழ்த்திக் கொள்ளும் ஒரு இதம் என்றால் அது மாலைப்பொழுது மட்டுமே. மனதின் ஒவ்வொரு அறைக்குமான ஒரு விசுவாசம் மாலையோடு நிகழ்ந்துகொண்டேயிருக்கும். அஃது ஒரு இடுகுறிப் பெயர் போல. அறுவகைப் பொழுதுகளில் மனிதர்களோடு இராச்சியம் செய்யும் பொழுது எதுவென்றால் மாலையெனப் பகரலாம். முதிர்ந்த வெப்பத்தில் நிழலைத் தந்து கை நீவும் ஒரு இளைப்பாறல் மாலை. மாந்தர்கள் ஒன்றடங்கிப் பேச, வீடடைய, உற்சாகப்படுத்திக்கொள்ள, விரும்பிய இடங்களுக்குச் செல்ல, பிடித்தவர்களோடு உரையாட, ஒரு இடத்தில் ஓய்வாக அமர்ந்து வெளி உலகைப் பார்வையிட, அமர்ந்து வாசிக்க, சுவரில்லா மாடியில் கதையாட என எல்லாவற்றிற்குமான ஒரு காரியகர்த்தா மாலை.

சில நேரம் இம்மாலைப்பொழுது புலம்பும் பொழுதாகி விடும். எப்படி? குறுந்தொகைத் தலைவி போல,

"புள்ளும் மாவும் புலம்பொடு வதிய

நள்ளென வந்த நார் இல் மாலை

பலர் புகு வாயில் அடைப்பக் கடவுநர்,

'வருவீர் உளீரோ?' எனவும்

வாரார் தோழி நம் காதலோரே!"

மாலைப்பொழுதைக் கண்டு தலைவி தோழியிடம் சொல்வதாக அமைந்த பாடல் இது. பறவைகளும் விலங்குகளும் தனிமைத் துயரில் வருந்த அன்பில்லாத மாலைப்பொழுது வந்துவிட்டது. அம்மாலை நேரத்தில் விருந்தினர் பலர் வருகை தரும் வீட்டில் கதவை அடைப்பதற்காக, வீட்டிலிருந்து வெளியே சென்றவர்கள் யாரேனும் இருக்கிறீர்களா? எனக் கேட்கின்றனர், அப்படிக் குரல் தந்தும் நம் காதலர் வரவில்லை என்று தலைவி வருந்திக் கூறுவதாக இது உள்ளது (Nagarajan, 2004).

முன்பெல்லாம் இனித்த மாலைப்பொழுது காதலர் வராததால் புலம்பும் பொழுதாகி விட்டது. தனிமையும், மாலையும் சேர்ந்து தன்னை வதைக்கின்றதைப் பெருங்குறையாய் உணர்கிறாள். நீளும் மாலையும், தனிமையும் தனக்கான நெடுங்கேட்டைத் தந்ததை, தன் மனநிலையைச் சிறிதும் எவ்வித நீட்டித்தலின்றி, திறந்த சொற்களாக வெளிப்படுத்துகின்றாள். எவ்வித மறைத்தலும் அவளிடமில்லை. தனக்குப் பிடித்தமான மாலைப்பொழுது பிடிக்காமற் போனதற்கான கலப்பற்ற உணர்வுதான் இது.

எப்படியாயினும் தலைவிக்கு அந்தத் தனிமையும், மாலையும் ஒரு நெருக்கத்தை தந்துகொண்டேதானிருக்கும். வராத தலைவனை நினைத்து நினைத்து மனதில் இருத்திக்கொண்டுதானே இருக்கிறாள்! அந்த இருத்தலை இந்தத் தனிமையும், மாலையும்தானே தந்துகொண்டேயிருந்தது. அவ்வளவுதான் விடயமாக குறுந்தொகைத் தலைவி காண்கிறாளென்பதே இதன் மொழியாடல்.

## காதல், காமம்

காதல், காமம் இதனை பிறப்புச் சொற்கள் எனலாம். இதிலிருந்துதான் எல்லாமும் தொடக்கம். அது ஒரு நிகழ்கலையான ஆண், பெண் என்பவற்றிற்கான கண் சிமிட்டு வித்தை இரு சொற்களும் ஆகும். மனித உயிரின் சங்கற்பம் இவ்விரண்டும். கண்டு சுகித்தல் எனக்கூட அறுதியிடலாம். இந்தச் சுகித்தல் சில நேரங்களில் தலையைத் தடவும். பல நேரங்களில் தலையைத் தட்டும். சில பல நேரங்களில் தலை தடுமாறும். இன்னும் சிற்சில நேரங்களில் தலை தாழ்ந்து போகும். தாழ்ந்து போதலென்பது இகழ்ச்சியால் அல்ல. அது ஒரு வணங்குதல். கண்டடைந்தடைந்து காணும் மிகுதிச் சாலல் போல. தம்மை அண்மைச் சுட்டாகவும், சேய்மைச் சுட்டாகவும் தருவித்து உயிர்ப்பித்தலான சாயல் அது. உயிர்த்து மேல் வருவதை அகப்பையால் அள்ளிக்கொண்டே வந்தோமென்றால் முற்றில்லாத நில ஆழம்போல உள்ளிழுத்துக் கொள்ளும். எவ்வாறெனில்,

"யதார்த்தத்தில் மொழி என்பது வெறுமனே பரிமாற்றக் கருவியாக மட்டும் இருப்பதில்லை. அது அதையும் தாண்டிய ஒரு முக்கிய வினையாக இருக்கிறது. மொழியின் அடிப்படையான வினைகளில் ஒன்று உடலை நிலத்துடன் பிணைப்பதே. அல்லது தனி உயிரியாக உள்ள மனிதனைச் சமூக உயிரியாக மாற்றுவதுதான்,".

என்று சொல்லப்படும் கூற்றோடு இந்த உடல் காதல், காமத்தோடு இணைந்ததுதானென்றாலும் நிலத்துடன் இவ்வுயிர்கள் அனைத்தும் முதன்மையானதாகப் பிணைந்ததென்ற உண்மை புலப்படும் (Jamalan, 2018).

இதனுள் 'காதல்' என்பதின் முதலெழுத்து 'கா' ஓரெழுத்து அசைச்சொல். இதை சோலை, பூந்தோட்டம், பூங்காவனம் என வகைப்படுத்தலாம். பூவை நிரப்பிய பூக்குடலை என்றும் அழகுப்படுத்தலாம். பூ என்பதே மலர்தல்தான். மலர்ச்சிதான். நமக்கான அன்பை மலரச் செய்தல்.

காந்தம்போல ஒருவருக்கொருவர் ஈர்ப்பை இழுத்துக்கொண்டேயிருத்தல், கண்டறிதல் எதுவோ அது காதல். எதைக் கண்டறிதலென்றால் பார்ப்பதும், உண்டாக்குவதும், உடல் சிலிர்ப்பதும், ஆராய்தலும், ஒத்திருத்தலும், பொருந்துதலும், செய்தலும் இதுபோல் இன்னபிற உணர்வதும்தான். காதலை ஒரு செஞ்சொல் எனலாம்.

இனி, அடுத்த நிலைப்பாடு காமம். இதனை நிறைத்தல், நிரப்புதல், நிரம்பி வழிதல் எனவும் வகைப்படுத்தலாம். அது, ஒரு திருத்திக்கொள்வதும், திருத்தப்பட்டுக் கொள்வதுமான நிகழ்தல் மற்றும் திருப்தியாக்கப்படுதல் என்றும் அழைக்கலாம். உடலிற்கான நிறைவுத் தேடுதல் அது. காதலில் மெய்யில் தோன்றும் செய்கை. இந்தக் காமத்திற்குப் புரிதலும், பேசித் தீர்த்தலும், காத்திருத்தலும் மிகத் தேவை. புரிந்து நிகழும் காமத்தில் பிரிதலென்பது இல்லை. காமத்தில் நச்சுப் பார்வையோ, நாணித்தலோ தேவையில்லை. அது ஒரு வெளிப்படும் நிகழ்வு. அதனுள் நெருங்குதல், விலகல், அலைக்கழிப்பு, பசத்தல் எல்லாம் வரும். இதெல்லாம் கடந்துதான் புதுப்பித்தல் மனோநிலை வாய்க்கும். காமம் ஒரு மூப்புச் சொல்.

சமூகத்தில் இதற்கான பார்வை வேறு பொருள். முக்காடு போட்டு மறைத்தலினால் இயற்கையான ஒரு மனோநிலை அசுர நிலையாகின்றது. பாலினக் கல்வியை முதன்மையானதாக மாற்ற வேண்டிய ஒரு கட்டாயச் சூழல் தேவையானதொன்று. உடல் சார்ந்த செய்திகள் விளம்பரத்திற்கானதொன்றாக மாறியதும்தான் சமூகத்தில் சிக்கலாகிப் போனது. குடும்பம் சார்ந்தியங்கும் ஒரு ஆண்மகவும், ஒரு பெண்மகவும் சமூகத்தில் ஒரு அங்கமாக இயங்காமல் வன்நிலையில் தள்ளப்படுவதும், தள்ளப்படாமல் இருப்பதும் உடல் சார்ந்த சிக்கலினால்தான் எனலாம். இவ்வுடல் சார்ந்த சிக்கல் வம்பு பேசும் பொருளாகவே இங்கு பார்க்கப்படுகின்றது. இச்சிக்கலை உள்ளது உள்ளபடி உரைக்கும் சூழலும் முன்பு இருந்திருக்கிறது.

“முட்டுவேன் கொல்? தாக்குவேன் கொல்?

ஓரேன் யானும் ஓர் பெற்றி மேலிட்டு

‘ஆஅ! ஒல்’ எனக் கூவுவேன் கொல்?

அலமரல் அசைவளி அலப்ப, என்

உயவுநோய் அறியாது, துஞ்சும் ஊர்க்கே”

தன்னை வருத்தும் உடல் பற்றிய உணர்வை உடைக்கும் ஒரு பெண்ணின் மன ஆற்றாமைதான் இந்த சங்கப்பா. சுழன்று அசைந்து, மென்மையாக வீசும் தென்றல் காற்று என்னை வருத்துகின்றது. என் துன்பத்தின் காரணம் காமநோய். இதனை அறியா ஊரார் தூங்குகின்றனர். இப்படிப்பட்ட என் நிலையை அறிவிக்க முட்டிக் கொள்வேனா? தாக்கிக் கொள்வேனா? ஒரு காரணம் கற்பித்து ஆ, ஒல் என ஒலி எழுப்பிக் கூப்பிடுவேனா? எதைச் செய்வது என நானறியேன் என்கிறாள் (Nagarajan, 2004).

இது ஒரு கட்டுடைக்கப்பட்ட அறிவிப்பு. தனக்கான தேடல். தான் விரும்பியதொன்று எனப் பார்க்கப்படல் மட்டுமே இதற்கான நிலைப்பாடு. உட்கழுத்தை இறுக்கிக்கொண்டிருக்கும் இறுக்கலை முழுவதுமாகத் தளர்த்திக்கொண்டு மூச்சை விட்டு வெளிப்படுவதுதான் அது. இந்தப் பெருவெளி முழுதும் காற்று ஒன்றுதான். தான் தூங்க முடியவில்லை. ஊரார் தூங்குகின்றனர். இதில், தனித்துத் தனியளாகிப் போன பெண்ணிற்கான நிலை அவளுக்குரியது. அதில் சுற்றம், உற்றோர், ஊரார் நுழைய இடமில்லை. இச்சிறப்பே குறுந்தொகைத் தலைவியின் மொழி சொல்லும் செய்தி எனலாம்.

## முடிவுரை

இவ்வாறாக, மொழியின் வழியே காலந்தோறும் வடிக்கப்பட்டுள்ள புனைவுகள் பல்லாற்றான சான்றுகளைக்கொண்டு நிறுவப்பட்டு வந்துள்ளது. இதில், பார்க்கப்பட வேண்டிய, அணுக வேண்டிய கருத்து என்ன எனப் பார்க்கும்போது மொழிக்கும், மனித உணர்வுகளுக்கும் உள்ள தொடர்பு மட்டுமே. மொழிதான் மனித உயிர்களைச் சமன்படுத்தும் ஒரு பாலமெனலாம். மனிதர்களை சமூக வாழ்க்கைக்கு

நிர்ப்பந்தித்துத் தள்ளும் ஒரு தூண்டலாகவே மொழி உள்ளது. அவ்வகையில் எப்பொழுதோ நடைபெற்ற அல்லது நடந்ததாக கற்பனைக்குள்ளாக்கப்பட்ட புனைவுகளைக் கட்டமைத்துப் பேசும் வரலாறாகவே மொழியும், நிலமும் பார்க்கப்படுகின்றது. அதனின் பெரும் கூறு சங்க இலக்கியம். சங்க இலக்கியத்தில் ஒன்றாகிய குறுந்தொகையின் வழி சில பாடல்களின் வழி சிற்சில கருத்துக்களையும், புலவர்களின் சொற்கருத்துக்களையும், குறைவான வரிகளில் எவ்வளவு பெரிய மனித உயிரிகளின் மன உணர்வுகளை அறுதியிட்டுக் காட்டியிருக்கிறார்களென்பதையும் ஆராய்வது ஒரு பெரும் உயராய்வுக்குரியது. அதனின் அடிப்படையில் சிறு கூறாக, இந்தக் கட்டுரை அமைந்துள்ளது.

## References

Jamalan, (2018) Mozhiyum Nilamum, Pudhumalar Pathipagam, Erode, India.

Murugesapandiyan, N. (2014) Attrai Thingal Annilavil, New century Book House, Chennai, India.

Nagarajan, V. (2004) Kurunthogai Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India.

Panjaangam, K. (2019) Naveena Kavithaikalum, Enn Vasippugalum, Annam Pathipagam, Chennai, India.

Poornachandran, (2004) Thani Nayagam Adikal, Annam Pathipagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License